10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 161 புதன்கிழமை நவம்பர் 01 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## வாளுடன் சிக்கிய சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளியில்!

யாழ்ப்பாணம், நவ.01
யாழ்ப்பாணம் கண்டி வீதியில் மடத்தடி சந்திப் பகுதியில் வாளுடன் கைது செய்யப்பட்ட நான்கு சிறுவர்களையும் 14 நாட்களுக்கு சான்று பெற்ற சீர்திருத்தப் பாடசாலையில் தடுத்து வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நேற்றுக் கட்டளையிட்டார். யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ரோந்து 06

# ஒன்பது பேருக்கும் கண்பார்வை அவுட்?

யாழ்ப்பாணம், நவ.01
தனியார் வைத்தியசாலையில் அண்மையில் கண்புரை சத்திரசிகிச்சை செய்து கொண்டதில் பாதிப்புக்கு உள்ளாகிய ஒன்பது பேருக்கும் கண்பார்வை அற்றுப்போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த ஒன்பது பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஐவர் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர். கொழும்பில் ஒருவரது கண் அகற்றப்பட்டது. ஏனையவர்கள் குணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஒன்பது பேரின் கண்பார்வையும் செயலிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் எதிரொலிக்குத் தெரிவித்த பாதிக்கப்பட்ட ஒருவரின் உறவினர்.

"யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகமும் வைத்தியரின் நலன்கருதி இவ்விடயத்தை மூடிமறைக்க முயல்கின்றது. எமது உறவினர் உட்பட ஒன்பது பேரின் கண்பார்வையும் செயலிழந்துவிட்டதாகவே எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் சட்டரீதியாக நடவடிக்கைகளுக்குத் தயாராகி வருகின்றோம்" - என்றார். (எ)

## மகளைக் காப்பாற்றிய தாய் மின்சாரம் தாக்கி பலி!

தும்பளை, நவ.01
பருத்தித்துறை தும்பளை பகுதியில் மின்சாரம் தாக்கிய மகளைக் காப்பாற்றச் சென்ற தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை மழை பெய்து கொண்டிருக்கும் போது பெண் ஒருவர் வீட்டில் தொலைக்காட்சியைப் போடுவதற்காக கேபிள் லைன் வயரினை தூக்கியுள்ளார். அதன் போது அவருக்கு மின்சாரம் தாக்கிய நிலையில் அவர் சத்தமாக கத்தியுள்ளார். அதனைக் கேட்ட தாயார் ஓடிசென்று மகளை இழுக்கும் போது மகள் தூக்கி எறியப்பட்டுள்ளார். இதன்போது தாய்க்கு மின்சாரம் தாக்கியதில் அவர் பலியாகியுள்ளார். இச்சம்பவத்தில் தும்பளையைச் சேர்ந்த இளையராஜா அம்பிகை (வயது 50) என்பவரே உயிரிழந்துள்ளார். (உ-11)

## சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதத்துக்குப் பதில் இல்லை



யாழ்ப்பாணம், நவ.01
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் 15 நாட்களுக்கு முன் அனுப்பிய கடிதத்துக்கு இதுவரை பதிலேதும் கிடைக்கவில்லை என 06

## கள்ளுக்குத் தடை இல்லை

கொழும்பு, நவ.01
தென்னை மற்றும் பனையிலிருந்து கள் எடுப்பதற்கு தடை விதிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள நிதி அமைச்சு எனினும் கள் இறக்குவதற்கு அனுமதிப்பத்திரம் அவசியம் என தெரிவித்துள்ளது. கள் இறக்குவதற்கு தடை விதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியன. அதனையடுத்து மக்கள் மத்தியில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் ஏற்படத் தொடங்கின. இந்நிலையில் அது தொடர்பில் நிதியமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பான மதுவரி திணைக்கள கட்டளைச்சட்டத்தின் 15 ஆவது பிரிவில் (பாகம் 52) திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அதற்கமைய தென்னை, பனை மரங்களிலிருந்து கள் எடுப்பதற்கு மதுவரி திணைக்களத்தின் 06

### பல்கலை மாணவர்களுக்குத் தடை விடுதிகளிலிருந்து வெளியேற உத்தரவு

# பல்கலை நிர்வாகம் சர்வதிகாரம்!




யாழ்ப்பாணம், நவம்பர் 01
யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகத்துக்குள் மாணவர்கள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, யாழ். பல்கலைக்கழக வாயில்களை மூடி, பல்கலைக்கழக சமூகத்தினர், நேற்றுமுன்தினம் போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றும் இந்தப் போராட்டம் தொடர்ந்த நிலையிலேயே, யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் ஆகியவற்றின் கல்விச் செயற்பாடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இடைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பீடாதிபதிகளுடன் நடத்திய கூட்டத்தை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழக பிரதான வளாகத்துக்குள் மாணவர்கள் நடமாடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் துணைவேந்தர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன், மாணவர்களை விடுதியில் இருந்து இன்று மாலை 4 மணிக்குள் வெளியேறிவிடுமாறும் துணைவேந்தர் அறிவித்துள்ளார். (எ)

## மாணவர் போராட்டம் தோல்வியில் முடியும்

### துணைவேந்தர் சீற்றம்



யாழ்ப்பாணம், நவ.01
யாழ்.பல்கலைக்கழகத்தின் 3 பீடங்களின் கல்விச் செயற்பாடுகளை நிறுத்தி விடுதிகளில் உள்ள மாணவர்களை வெளியேறுமாறு அறிவித்துள்ளதால் மாணவர்களுடைய போராட்டம் நிச்சயமாகத் தோல்வியடையும் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை குறித்து மேலதிக தகவல்களை அறிவதற்காக 06

## விடுதிகளிலிருந்து வெளியேற மாட்டோம்

### போராட்டம் தொடரும்...

யாழ்ப்பாணம், நவ.01
அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக சமூகத்தின் போராட்டம் தொடரும் என அறிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாம் விடுதிகளில் இருந்து வெளியேறப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாக பல்கலைக்கழக வாயில்களைப் பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து கலை, விஞ்ஞான, முகாமைத்துவ பீடங்களை மூடுவதாக அறிவித்த பல்கலைக்கழக நிர்வாகம் இன்று மாலை 4 மணிக்குள் மாணவர்கள் அனைவரையும் விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு பணித்திருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

## விசா மோசடியில் கைதானவர்களுக்குப் பிணை

போலி விசாவைப் பயன்படுத்தி நாட்டிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்ட நான்கு பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட மாவட்ட நீதிமன்றம் நேற்று அவர்களுக்குப் பிணை வழங்கியது.

குறித்த நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக இத்தாலி மற்றும் ஜேர்மனுக்குச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் மினுவாங்கொட மாவட்ட நீதிமன்றில் ஆஜரான இவர்களுக்கு, தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் பருத்தித்துறை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## சிறைக்கைதி தற்கொலை

மொனராகலை,நவ.01

மொனராகலை சிறைச்சாலையில் சிறைக்கைதி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிபிலைப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ)



# கினிகத்தேனையில் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,நவ.01

நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் மேலும் இரண்டு பிரதேச சபைகளை உருவாக்குவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, கினிகத்தேனை நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

மலையக முற்போக்கு முன்னணியின் ஏற்பாட்டில் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினர் எலப்பிரிய நந்தராஜ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

அம்பகமுவ பிரதேசத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள மேலும் இரண்டு பிரதேச சபைகளுக்கு எல்லைகள் பிரிக்கப்படும் போது இதுவரை இப்பகுதியில் வாழ்ந்து வரும் இனங்களுக்கு இடையில் பாரிய பிளவுகள் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளது எனவும், சிவனொளிபாதமலை ஆலயம் தமிழர் பிரதேசத்துக்குள் செல்லும் நிலை உருவாவதால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினர் எலப்பிரிய நந்தாராஜ் தெரிவித்தார். (ஓ)

## லஹிரு வீரசேகர பிணையில் விடுதலை



கொழும்பு, நவ.01

அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளரான லஹிரு வீரசேகர மற்றும் தெம்பிட்டியே சுகதானந்த தேரர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில், இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக விளக்கமறியலி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் நேற்று கொழும்பு, கொட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்கள் இருவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. (ஓ)

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது



கடவத்தை, நவ.01

கடவத்தை பஸ் நிலையத்துக்கு அருகில் ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து அப்பிள் ரக போதை மாத்திரைகள் நூறு கைப்பற்றப்பட்டுள்ளன. வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ)

## வீதியில் கிடந்த முதியவருக்கு தோள் கொடுத்த பொலிஸ்

அநுராதபுரம்,நவ.01

அநுராதபுரம் பகுதியில் சுகயீனமுற்ற நிலையில் வயோதிபர் ஒருவரை நடு வீதியில் விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நடமாட முடியாத நிலையில் விழுந்து கிடந்த வயோதிபர் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே வயோதிபர் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட வயோதிபரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்த அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, குறித்த வயோதிபர் வெலிகம கப்பரதோட்டை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த வயோதிபருக்கு மேலதிக உதவிகளைப் பெற்றுக் கொடுக்க அநுராதபுரம் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ)





## சாரதிகளுக்கு அறிவுறுத்து

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களைச் செலுத்துவோருக்கு முக்கிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களைச் செலுத்துவோரைக் கூடுதலான கவனத்துடனும், வேகக் கட்டுப்பாட்டுடனும் வாகனத்தைச் செலுத்துமாறு அதிவேக நெடுஞ்சாலை தகவல் பிரிவு அறிவித்துள்ளது.

மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்துள் வாகனங்களைச் செலுத்துமாறும், இரண்டு வாகனங்களுக்கு இடையிலான இடைவெளியை 2 மீற்றருக்கு அதிகமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெறக் கூடிய விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை தகவல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ)

## பரிசோதனைக்காக தோண்டப்பட்ட உடல்



மர்மமான முறையில் மரணமடைந்த கிராம சேவை உத்தியோகத்தர் சோமசுந்தரம் விக்னேஸ்வரனின் உடலை மீள் பரிசோதனை நடத்துவதற்கு களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த நபர் மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் எனும் கிராமத்தில் கிராம சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த 2016.04.15 ஆம் திகதியன்று எருவில் கிராமத்தில் வைத்து மர்மமான முறையில் மரணமடைந்திருந்தார்.

குறித்த மரணம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 2017.09.28 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த மரணம் தொடர்பில் உண்மை நிலையைக் கண்டறிவதற்கு உடலை மீள் பரிசோதனை நடத்துவதற்கான அனுமதியினை வழங்குமாறு நீதிமன்றிடம் கேட்கப்பட்டது.

இதனையடுத்து உடலைத் தோண்டி, எடுத்து மீள் பரிசோதனை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி நேற்றைய தினம் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி, சட்ட வைத்திய அதிகாரி இனோக்கா, முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியும், சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் சந்திரமணி உள்ளிட்டோர் முன்னிலையில் பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டது.

குறித்த கிராம சேவை உத்தியோகத்தரின் உடல், மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஓ)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் சுங்கப் பிரிவில் மாட்டிய பெண்



கொழும்பு, நவ. 01

16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று அதிகாலை டுபாயிலிருந்து இலங்கை வந்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துச் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் பயணப் பையிலிருந்த 168 சிகரெட் பக்கெற்றுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர், 33 வயதான கிராண்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் எனத் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன், 01 நவம்பர் 2017 ethirolijaffna@gmail.com

# சீப்பை ஒளித்தால் நின்றுவிடுமா திருமணம்

அநுராதபுரத்தில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத் திருந்த கதவடைப்புப் போருக்கு பல்கலை நிர்வாகமும் துணைவேந்தரும் 'செக்' ஒன்றை வைத்துள்ளனர்.

அனைத்துப் பீடங்களும் காலவரையறையற்று மூடப்படுவதோடு, பல்கலை விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் அனைவரும் உடனடியாக வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திருமதி வசந்தி அரசரட்ணம் துணைவேந்தராக இருந்த போது மாணவர்களின் போராட்டங்களை பிசுபிசுத்துப்போக வைப்பதற்காக விடுதிகளில் உள்ள மாணவர்களை வெளியேற்றுவதையே பிரதான உத்தியாக வைத்திருந்தார். இப்போது புதிய துணைவேந்தரும் அதே உத்தியையே கையில் எடுத்திருக்கிறார்.

இந்தமுறை மாணவர்கள் போராடுவது பகிடிவதையில் ஈடுபட்ட சகமாணவர்களை காப்பாற்றவோ அல்லது பல்கலை நிர்வாக சீர்கேடுகளை அம்பலப் படுத்தவோ அல்ல. ஒரு இனத்தின் நீண்டகாலச் சாபக்கேடாக தொடர்கின்ற அரசியல் கைதிகள் என்ற விவகாரத்துக்கு ஒரு தீர்வுகாண வேண்டும் என்ற பொது நோக்குடனேயே தம்முடைய போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். முதலில் உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் மைத்திரியின் உறுதி மொழியை நம்பி அதனைக் கைவிட்டிருந்தனர். அதன்பின்னர் கொழும்பில் நடந்த பேச்சுவார்த்தையில் "நீதியமைச்சரும் சட்டமா அதிபரும் நாட்டில் இல்லை. வந்தவுடன் நல்ல பதிலாகச் சொல்லி அனுப்புகிறேன்" என்று மாணவர்களுக்கு மழுப்பல் பதிலை சொல்லியிருந்தார் மைத்திரி.

சட்டமா அதிபரும் நீதியமைச்சரும் நாடுவந்துசேர்ந்தும் நாட்கள் பல வாகி விட்டன. எனினும் இதுவரை அவர் சொல்லி அனுப்புவதாகச் சொன்ன நல்லபதில் வந்துசேரவேயில்லை. இந்த நிலையில்தான் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய போராடடத்தை வகுப்புப் புறக்கணிப்பு வடிவத்தில் மீண்டும் ஆரம்பித்தார்கள்.

இந்தப் புறக்கணிப்பால் விரிவுரைகள் மட்டும் நடைபெறவில்லையே தவிர பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இதனால் தங்களுடைய போராட்டம் கண்டு கொள்ளப்படாமல் போய்விடுமோ என்ற எண்ணத்தில் இன்னொரு வடிவத்தில் போராட மாணவர்கள் முடிவெடுத்தார்கள். அதுதான் கதவடைப்பு.

பல்கலைக்கழத்தின் சகல நுழைவாயில்களும் நேற்றுமுன்தினம் காலை மாணவர்களால் இழுத்து மூடப்பட்டது. இதனால் விரிவுரையாளர்களும் கல்வி சாரா ஊழியர்களும் உள்ளே நுழையமுடியவில்லை. நிர்வாகம் முடங்கியது. இது அரசுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. எனவே, தன்னுடைய கைப்பொம்மைகள் மூலம் மாணவர்கள் போராட்டத்தை சிதைக்கமாறு அதிகாரம் உத்தரவிட்டது. அந்த உத்தரவின் பிரகாரமே துணைவேந்தரால் சகல பீடங்களும் மூடப்பட்டதோடு பல்கலைக்கழக விடுதியில் இருந்த மாணவர்களும் வெளியேற்றப்பட்டனர். விடுதிகளில் உள்ள மாணவர்களே போராட்டங்களில் அதிகளவில் பங்கெடுப்பதால் அவர்களை அகற்றிவிட்டால் வெறும் பத்துப் பதினைந்து பேரோடு அது தோற்றுவிடும் என்று துணைவேந்தர் பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறார். சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்றுவிடும் என்ற கதைபோல்தான் இது. மாணவர்கள் சக்தி என்னவென்பதை அடுத்துவரும் நாள்கள் துணைவேந்தருக்குச் சொல்லத்தான் போகின்றன.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# 250 ஆவது நாள் போராட்டத்தில்

## கவனயீர்ப்பு ஊர்வலம்




வவுனியா, நவ.01

இராணுவத்தினரிடம் கையளிக்கப் பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இடம் பெற்றது.வவுனியா ஏ9 வீதியில் கடந்த 250 நாட்களாக நடந்து வரும் தமது போராட்டத்தை அரசாங்கமோ, தமிழ் தலைமைகளோ கருத்தில் கொண்டிருக்கவில்லை. எனவே சர்வதேசமும், புலம்பெயர் சமூகமும் இதில் தலையிட்டு தமது பிள்ளைகளை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இவ்வூர்வலத்தினை நடத்தியிருந்தனர். வவுனியா கந்தசுவாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம் மணிக்கூட்டு கோபுர சந்தியை வந்தடைந்து கண்டி வீதி ஊடாக போராட்டம் இடம் பெற்ற இடத்தினை வந்தடைந்திருந்தனர். (உ)


# பெற்றோர் தினமும் மைதான திறப்பு விழாவும்



யாழ்ப்பாணம், நவ.01

வேலணை மத்தியகல்லூரியின் பெற்றோர் தின விழாவும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதான திறப்புவிழாவும் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கூடைப்பந்தாட்ட மைதானத்தைத் திறந்துவைத்தார். பாடசாலையின் அதிபர் திரு.சிவகாமி கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார், ஆளுநரின் உதவி செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஊர்காவற்றுறை கஞ்சதேவா கடற்படைத்தள கட்டளை அதிகாரி கப்டன் எல்.ஏ.ஆர்.டி. ஹெட்டியாராய்ச்சி, பிரதேச செயலாளர் வேலணை செந்தில்நாதன், பழைய மாணவி திருமதி ஸ்கந்த குமாரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (உ)

# விபத்தை ஏற்படுத்தி இளைஞன் கைது



நெல்லியடிப் பகுதியில் நேற்று டிப்பரும் மோட்டார் சைக்கிலும் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. எனினும் விதிமுறை மீறி பயணித்து விபத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்து மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞனை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

# மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ.01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின் தடை பற்றிய அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை சீமெந்து ஆலைப்பகுதி, பெற்றோலியக்க கூட்டுத்தாபன அலுவலகம் மற்றும் எண்ணை தாங்கிகள் ஆகிய பிரதேசங்களிலும்நாளை காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியாப் பிரதேசத்தில் சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிரதேசம் ஆகியபிரதேசங்களிலும்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக் குளம் புதிய வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் 4 ஆம் திகதி சனி காலை 8மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியாபிரதேசத்தில் சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் 5 ஆம் திகதி ஞாயிறு காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, விக்ரோறியா வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ்கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, சிறிநதியா நகை மாளிகை, ராஜா ரோக்கில்ஸ், எல்.ஓ.எல்.சி ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ், வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கேரளக் கஞ்சாவுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, நவ.01

வவுனியா, பேரூந்து நிலையில் கேரளா கஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா பேருந்து நிலையத்தில் வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் நேற்று கைது செய்யப்பட்டார். கிளிநொச்சி பகுதியில் இருந்து அனுராதபுரம், தம்புதேகம பகுதிக்குச் செல்லவிருந்த நிலையில் வவுனியா பேரூந்து நிலையத்தில் நின்ற குடும்பஸ்தரின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பொலிசார் குறித்த நபரின் கைப்பையினை சோதனை செய்த போது அதில் ஒரு கிலோ கேரளா கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து, கஞ்சா மீட்கப்பட்டதுடன், குறித்த நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். அனுராத புரம், தம்புதேகம பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (உ)



## இன்று நாளும் கோளும்

01.11.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 15 ஆம் நாள்

துவாதசி பகல் 03.28 வரை | உத்தரட்டாதி மாலை 05.45 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் 09.15 - 10.15 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆக்கம் | ஆரோக்கியம் | ஜெயம் | பாசம் | உதவி | போட்டி | சினம் | மறதி | ஆர்வம் | ஓய்வு | பக்தி | பாராட்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையைப் பணயக் கைதியாக்கி வடமராட்சியில் துணிகரக் கொள்ளை

வடமராட்சி, நவ.01

துன்னாலை குமரன் குளப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொன்னையா விஷ்னுராஜா என்பவரின் வீட்டின் புகைக்கூட்டின் ஊடாக வீட்டுக்குள் இறங்கிய ஒருவர் பூட்டியிருந்த கதவினைத் திறந்துள்ளர். அதன்போது 10க்கும் மேற்பட்டவர்கள் முகத்தை தெரியாதவாறு கறுப்பு துணியால் கட்டியவாறு கத்தி கொட்டன் போன்ற ஆயுதங்களுடன் உள்ளே சென்றுள்ளனர். வீட்டிலிருந்த அனைவரையும் ஓர் அறைக்குள் இருத்திவிட்டு குழந்தையை கையில் தூக்கியவாறு "சத்தமிட்டால் குழந்தையை கொன்று விடுவோம்" என்று மிரட்டியுள்ளனர். வீட்டு மேசையில் இருந்த கைத்தொலைபேசியினை எடுத்து எறிந்து உடைத்த அவர்கள் ஒரு தொலைபேசியை எடுத்ததோடு வீட்டிலிருந்த 25000ரூபாய்க்கு மேற்பட்ட பணம் மற்றும் நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர். இதேவேளை மற்றொரு வீட்டுக்கு கொள்ளைக்குச் சென்ற இவர்கள் முன்னர் கொள்ளையடித்த வீட்டில் எடுத்துச் சென்ற உண்டியலை அங்கு வைத்து விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. இச் சம்பவங்கள் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-11)



## துப்பாக்கிச் சூட்டில் ஐவர் காயம்

கொழும்பு, நவ.01

எல்பிடிய - பட்டடப்பொல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவரே வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தின் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)

# மரம் நடுகை



கரவெட்டி, நவ.01

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் "பசுமை நிழலின் கீழ் வல்லை" மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கரவெட்டி பிரதேச செயலர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு கொட்டும் மழையிலும் மரம் நடுகையில் ஈடுபட்டனர். (உ-11)

## ரஞ்சனுக்கு பதவியுயர்வு?



கொழும்பு, நவ.01

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பதவியை வழங்கப்படவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் திவுலபிட்டிய தொகுதி அமைப்பாளராகப் பதவி வகித்த பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு குறித்த இடத்துக்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கித்சிறி மஞ்சநாயக்க நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## பிக்கு வாங்கிய இறைச்சிக் கடை

கொழும்பு, நவ.01

மத்துகம பிரதேச சபையினால் பொதுச் சந்தையில் நடத்திச் செல்லப்பட்ட இறைச்சிக் கடை ஒன்றை பௌத்த தேரர் ஒருவர் கேள்விப்பத்திரம் மூலம் கொள்வனவு செய்துள்ளார். களுபஹன சேலதெலாராமய விகாரையின் விகாராதிபதி மாவிட்ட ஞானரத்ன தேரரே இவ்வாறு கொள்வனவு செய்துள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டு குறித்த இறைச்சிக் கடை பிறிதொரு வர்த்தகரினால் 2,260,150 ரூபாவுக்கு பெறப்பட்டுள்ளதுடன், இம்முறை 2018ஆம் ஆண்டுக்காக குறித்த தேரரினால் 3,225,622 ரூபாவுக்கு பெறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேரர், மத்துகம நகரம் தற்போது புனித நகரமாக இருக்கின்றது. இந்நிலையில் இங்கு இறைச்சிக் கடைகளை மூடுவதற்கு பௌத்த பிக்குகள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுத்தோம். அதன்படி பிரதேச சபை அதிகாரிகளிடம் இது குறித்து தெரிவித்த போதிலும், நகர நிர்வாக சட்டத்திற்கமைய இது தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு அவர்களால் முடியவில்லை. இதன்காரணமாக 2018ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரத்தின் போது விண்ணப்பித்து, அந்தக் கடையை பெற்று மூடுவதற்குத் தீர்மானித்தோம் என்றார். எனினும் கேள்விப்பத்திரம் முலம் பெறப்பட்ட இறைச்சிக் கடை ஒன்றை மூடிவிட முடியாது என்று பிரதேச செயலாளர் கூறியுள்ளார். இறைச்சிக் கடையை கேள்விப்பத்திரம் மூலம் பெற்றுக் கொண்டவர்கள் விரைவில் கடையை திறக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (உ)

## இனிமேல் கள்ளில்லையாம்?

தருமு வழமையாக் காலமை எட்டுக் கெல்லாம் மரமேறிச் சீவிப்போட்டு ஒன்பதுக்குள்ளை கோப்பிரேசனுக்குப் போய்க் கள்ளைக் குருத்திட்டு வந்திடுவன். பாண் வான் பாட்டுப் போட்டுக் கொண்டு றோட்டாலை போகிற மாதிரி தருமுவும் சைக்கிள் பெல்லை நிங்..நிங்... எண்டு அடிச்சுக் கொண்டு ஒரு பாட்டோடை போவன். ஆள் பழைய காலத்துப் பாட்டைத் தான் அதிகம் விரும்பிப் படிப்பன்.

ஆனால் இண்டைக்குக் காலமை சத்தப் பொறுதி இல்லாமல் போறதைப் பாத்தன். முகமும் வாடிக்கிடந்திது. என்ன வில்லண்டமோ தெரியாதெண்டு நினைச்சுக் கொண்டு ஆரிட்டையும் கேப்பமெண்டு நிக்கேக்கை தருமுவே வந்தான்.

"என்னடா தருமு ஒரு மாதிரியா இருக்கிறாய்? என்ன நடந்தது உனக்கு?" எண்டு கேட்டன்.

"எல்லாம் போச்சுது. வெள்ளம் வீட்டுக்கை வந்திட்டுது" எண்டான். என்னடா இண்டைக்குத்தான் மழை கொஞ்சம் வடிவாப் பெய்து கிடக்கெண்டு சனம் சந்தோசப்படுகிது. இவன் என்ன வெள்ளம் வீட்டுக்கை வந்திட்டுது எண்டு சொல்லுறான் எண்டு நினைச்சுக் கொண்டு "அரை குறையாச் சொல்லாமல் கதையை வடிவாச் சொல்லு." எண்டதுதான் தாமதம் தருமன் விக்கி விக்கி அழத்தொடங்கிவிட்டான்.

தம்பி ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு இப்ப ஆளையே கடிக்கத் துவங்கிவிட்டாங்கள் எண்டு சொன்னான். மடிக்கை கையை வச்சிட்டாங்கள் எண்டு சொல்லேக்கையும் எனக்கு விளங்கேல்லை.

பிறகுதான் விசியத்தை வடிவாச் சொன்னான். வாற தை மாதம் தொடக்கம் பனையிலை இருந்து கள்ளிறக்கிறதுக்கு அரசாங்கம் தடைபோட்டிருக்காம். பேப்பரிலை வந்திருக்கெண்டு சொன்னதுதான் தாமதம் உதை வடிவாக் கொன்போம் பண்ண வேண்டுமெண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வாசிகசாலைப் பக்கம் போனன். ஏனெண்டால் தருமு சில நேரம் ஆற்றையேன் விழலக்தையளையும் கேட்டு கலாதிப்படுவன்.

பாத்தால் வாசிகசாலையிலும் இதைப்பற்றித்தான் இரண்டு மூண்டு பேர் கதைச்சுக் கொண்டு நிண்டினம். அதிலை ஒராள் சொன்னார் போயிலையிலை கை வைக்கேக்கை நாங்கள் சத்தம் போட்டிருக்க வேணும். பேசாமை இருந்திட்டம். அவன் இப்ப பாத்துப் பாத்து ஒவ்வொண்டாக் கை வைக்கத் தொடங்கி விட்டான்.

அதென்ன கித்துள் கள்ளை இறக்கலாம் பனை, தென்னையிலை இருந்துதான் கள்ளை இறக்கேலாது எண்ட புதுக் கதை. கித்துளிலை இருந்து தமிழர் இறக்கிறேல்லை. சிங்களவர் தான் கித்துளிலை இருந்து கள்ளிறக்கிறவங்கள். அதிலை கை வைச்சால் அரசாங்கம் கவிழுமெல்லோ. சிங்களவர் விடுவாங்களே?

பனையிலை இருந்து கள்ளிறக்கிறதை நிப்பாட்டினா இஞ்சை எத்தினபேருக்குப் பிரச்சினை எண்டு தெரியுமே? அது ஒரு வம்சாவம்சமா வந்த தொழில். கள்ளை வெறிகாறர் மட்டுமே குடிக்கினம்? அதிலை இருந்து பனங்கட்டி எடுக்கினம். எத்தினை விளையாட்டுச் செய்யினம். அதை நிப்பாட்டினா...?

உது கள்ளில்லைப் பிரச்சினை. வேறை எங்கையோ இடிக்கிறதுக்காச் செய்யிற அரசியல் விளையாட்டு எண்டது தான் என்ரை யோசினை.

பனையோடை ஒத்த தொழிலைக் கனபேர் செய்யினம். அவைக்கும் தலையிலை இடி விழுந்திது எண்டு தான் சொல்லவேணும். இது சும்மா நாடகம் போறுற அரசியல் ஐயா மாருக்குத் தெரியாதே? தேவை இல்லாததுக்கு அறிக்கை விடுறது. திலீபனுக்கு விளக்கு வைக்கப் போறனெண்டு முந்திக் கொண்டு போறது. மாவீரர் தினம் கொண்டாடப் போறதெண்டு அறிக்கைவிடுறது. மயானத்தைச் சுத்தமாக்கப் போறனெண்டிறது. அதுக்கு மதில் கட்டப்போறனெண்டிறது. சும்மா ஆக்களைப் பேக்காட்டிறியள். மைத்திரியிட்டை இது பிழையான விசியம் எண்டு ஆரேனும் சொல்லேலையே? கடவுளே.... அதை ஆரிட்டைச் சொல்லி அழ?

தம்பிமாரே நீங்கள் எங்களுக்கு விசேசமா ஒண்டும் புடுங்க வேண்டாம். அவங்கள் என்ன கனவைக் கண்டாங்களோ? அதைச் செய்யுங்கோ. அதுதான் நீங்கள் அவங்களுக்குச் செய்யிற ஆத்மா சாந்திப் பிரார்த்தனை. வெள்ளம் பல வழியிலை வீட்டுக்கை வந்திட்டுது எண்டதை விளங்கினால் சரி. ஏதாவது உடனை செய்யுங்கோ. என்னை மட்டும் தீக்குளிக்க வைச்சிடாதையுங்கோ...

- வில்லங்கம் விநாசி

# யானைத் தந்தங்களுடன் பூவரசங்குளத்தில் இருவர் கைது

வவுனியா, நவ.01

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் மூன்று யானை தந்தங்கள் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. வவுனியா, பூவரசங்குளம், குருக்களூர் புதுக்குளம் பகுதியில் வைத்து விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் 3 அடி தொடக்கம் 5 அடி வரையிலான 25 கிலோகிராம் எடையுடைய மூன்று யானைத் தந்தங்களை மீட்டுள்ளதுடன், அதனை வைத்திருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட யானைத் தந்தங்களும், கைது செய்யப்பட்ட நபர்களும் இரவு வவுனியா பொலிஸாரிடம் விசேட அதிரைப்படையினரால் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடைகளை அகற்றக் கோரி இளைஞர்கள் போர்க்கொடி





வவுனியா, நவ. 01

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கடைகள் அகற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்து இளைஞர்கள் சிலர் வவுனியா பள்ளிவாசல் முன்பாக இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளிவாசல் முன்பாகத் திரண்ட இளைஞர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களையும் அடையாளம் காட்டினர்.

குறித்த சட்டவிரோத கடைகள் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும், இதனால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்தனர். இந்தக் கட்டடங்கள் தொடர்பாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக தகவல் திரட்டப்பட்டுள்ளதாகவும் அவை சட்டவிரோதமானதாக அமைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், அரசியல் செல்வாக்கு காரணமாகவே அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இளைஞர்கள் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் முன்பாக இஸ்லாமிய இளைஞர்களும் ஒன்று கூடியமையால் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனால் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதியில் பதற்ற நிலமை காணப்பட்டதால் காலை முதல் மதியம் வரை பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இக்கவனயீர்ப்பு போராட்டம் குறித்து அப்பகுதியில் உள்ள வவுனியா பள்ளிவாசல் நிர்வாகம் கருத்து தெரிவிக்கையில்,

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா நகரசபையின் செயலாளர் ஆர்.தயாபரன் கருத்து தெரிவிக்கையில்,

"குறித்த ஆக்கிரமிப்பு கடைகளில் 14 கடைகளுக்கு முன்னைய வவுனியா நகரபிதா ஜி.ரி. லிங்கநாதனே 1995 ஆண்டு அனுமதி வழங்கியுள்ளார். அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலத்திலேயே இந்தக் கடைகள் அமைந்துள்ளன. எனவே இந்தப்பிரச்சினைக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் வவுனியா நகர சபைக்கு இல்லை. அத்துடன் இது தொடர்பாக ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**01.11.1999**

ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் புலிகளால் தொடங்கப்பட்டது.

## புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதியை சந்தித்தார்



கொழும்பு, நவ.1


புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமெவன் ரணசிங்க, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முற்பகல் சந்தித்துள்ளார். புதிய கடற்படைத் தளபதியாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்பு முதன் முதலாக உத்தியோகபூர்வமாக அவர், ஜனாதிபதையைச் சந்தித்தபோது, தன்னைத் தளபதியாக நியமித்தமைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். (ஆ)

## கவனம்! கடும் காற்று!!

யாழ்ப்பாணம், நவ.01

நாட்டின் வடமேல் மற்றும் மேற்குப் பகுதிகளில் நிலவும் வளிமண்டலக் குழப்ப நிலை காரணமாக காலி தொடக்கம் புத்தளம் மற்றும் மன்னார் ஊடாகக் காங்கேசன்துறை வரையிலான கடற்பிரதேசங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. குறித்த கடற்பிரதேசங்களில் மணிக்கு சுமார் 70 முதல் 80 கிலோ மீற்றர் வரை காற்று அதிகரித்து வீசக்கூடும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

## சிறுவன் மீது வன்புணர்வு பெண்ணுக்கு கடூழியச் சிறை



கொழும்பு, நவ.01

15 வயதுச் சிறுவனை வன்புணர்வு செய்த 48 வயதுப் பெண்ணுக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் 21 வருடக் கடூழியச் சிறை தண்டனை விதித்துள்ளது.

ஒரு குற்றத்துக்கு 7 வருடங்கள்படி மூன்று குற்றங்களுக்கு 21 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கெகிராவ மரதன்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண், தன் வீட்டுக்கு அருகில் வசிக்கும் சிறுவனை பல முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இறுதியில் சிறுவன் தன் பெற்றோரிடம் இது குறித்து தெரியப்படுத்தியதை அடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து நீதவான் மகேஸ் வீரமன் 21 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

சிறுவன் ஒருவனைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக பெண்ணொருவருக்கு 21 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை இலங்கையில் இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# வடகொரியாவில் அணுமைய விபத்து

**200 பேர் பலி**



வடகொரியா, நவ. 01

வடகொரியாவின் பியாங்யாங்கி அணு ஆயுதச் சோதனை மையத்தில் உள்ள சுரங்கம் இடிந்ததில் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற போதும் நேற்றைய தினமே இந்தச்செய்தி வெளியாகியுள்ளது.விபத்து நேரிட்ட சந்தர்ப்பத்தில் 100 பணியாளர்கள் பலியாகினர். பின்னர் மீட்புப் பணிகள் நடைபெற்ற போதும் மீண்டும் விபத்து நேரிட்டு உள்ளது. இதனால் மொத்தமாக 200க்கும் அதிமானோர் பலியாகி உள்ளதாகச் செய்தி வெளியாகி உள்ளது. தொடர்ச்சியாக வடகொரியா அணு ஆயுதம் மற்றும் வெடிகுண்டுகளைச் சோதனை செய்ததன் காரணமாகப் பரிசோதனைக் கூடம் பல வீனமாக இருந்தாலேயே இந்த விபத்து நேர்ந்ததாகவும், எனினும் இதன்போது அணுக்கதிர்வீச்சு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

## 'கிளினிக் 'போனவர் மாரடைப்பால் சாவு

### யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுச் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ.01

யாழ். போதனா வைத்தியசாலையில் முதல் நாள் கிளினிக்குக்குச் சென்றவர் மாரடைப்பால் உயிரிழந்தார்.புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியைச் சேர்ந்த துரைத்தினம் வாகீசன் (வயது-42) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் மாதாந்தக் கிளினிக்குக்காக குறித்த குடும்பஸ்தர் சென்றிருந்தார். எனினும் அவருக்கு வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனவும், எனவே விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுமாறும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நோயாளர் விடுதியில் குறித்த குடும்பஸ்தர் தங்கியிருந்து சிகிச்சை பெற்றநிலையில் நேற்றுக் காலை கழிப்பறைக்குச் சென்றபோது வழுக்கி விழுந்துள்ளார் உடனடியாக அவரை மீட்டு நோயாளர் விடுதியிலுள்ள கட்டிலில் கொண்டு சென்று சேர்ப்பித்த போது, திடீரென மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார். (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிப்பறிக் கொள்ளையர்கள் மூவருக்கு மூன்றாண்டு சிறை




யாழ்ப்பாணம், நவ.01

வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட்ட மூவருக்கு மூன்று ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் தலா 3 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவருக்கும், 24 வயதுடைய இரண்டு இளைஞர்களுக்குமே இந்த தண்டனை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் கடந்த ஜூலை மாதம் 17ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் சென்ற பெண்ணொருவரின் கூடையிலிருந்த 28 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தமை, அன்றையதினம் நாயன்மார்கட்டு பகுதியில் வைத்து பெண்ணொருவரின் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அறுத்த குற்றச்சாட்டுக்கள் குறித்த மூவர் மீதும் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது. சம்பவதினம் முச்சக்கர வண்டியொன்றில் சென்ற இந்த மூன்று சந்தேகநபர்களும் அடுத்தடுத்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர் என விசாரணைகளில் நிரூபிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றவாளிகளால் கொள்ளையடிக்கப்பட்ட பணம் மற்றும் தாலிக்கொடியும் அவர்களிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)




# கிளிநொச்சி பாடசாலைக்கு நிரந்தரப் பூட்டு

கிளிநொச்சி, நவ.01

"கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக மூடப்பட்ட பாடசாலைகளைத் திறப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆனால், தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குயின்ரஸ் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்தில், மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் நிலைவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில் "பொன்னாவெளி பாடசாலை, குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம் என்பன நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன. ஆனால் பல்லவராயன்கட்டுப் பாடசாலையைத் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய பாடசாலைகளைத் திறப்பதற்கான சூழல், தற்போது இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் 112 பாடசாலைகளில் தற்போது 104 பாடசாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# இணைந்து போராடுங்கள் இடைஞ்சல் செய்யாதீர்கள்

யாழ்ப்பாணம், நவ.01

அரசியல் கைதிகளுக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவியையும் ஆதரவையும் வழங்க வேண்டிய பெரும்பொறுப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் கல்விசார் சமூகத்தினருக்கும் நிச்சயம் உண்டு எனத் தெரிவித்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அதனை விடுத்து மாணவர்களுக்கு அநாவசியமான அச்சுறுத்தல்களையோ இடைஞ்சல்களையோ ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

"தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு, தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காண வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உணவுத் துறப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்திய கோரிக்கையானது யாழிலுள்ள பொதுஅமைப்புக்கள், அரசியல் கட்சிகள், மற்றும் மக்கள் அமைப்புக்களால் விடுக்கப்பட்டது இவர்களுடன் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கொண்டார்கள்.

இன்று பல்கலைக்கழக மாணவர்கள் அப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது அவர்களுக்கு உதவியையும் ஆதரவையும் வழங்க வேண்டிய பெரும்பொறுப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் கல்விசார் சமூகத்தினருக்கும் நிச்சயம் உண்டு.

எனவே மாணவர்களோடு நாமும் இணைந்து போராட வேண்டியது அவசியம். அவ்வாறு இணைந்து போராடா விட்டாலும் குறைந்தபட்சம் போராடும் மாணவர்களினது நலன்களை பேணும் நடவடிக்கைகை எனிலாவது ஈடுபடல் அவசியம். அதனை விடுத்து மாணவர்களுக்கு அநாவசியமான அச்சுறுத்தல்களையோ இடைஞ்சல்களையோ ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

மாணவர்களின் போராட்டம், அவர்களது கோரிக்கை நியாயம் என ஏற்றுக்கொண்டால் அதனை ஆதரிக்க வேண்டும் மாறாக எவராவது அல்லது எந்த அமைப்புக்களாவது அவர்களது கோரிக்கையோ, போராட்டமோ நியாயமற்றது என்றோ அரசியல் கைதிகளின் விடயத்தில் தாங்கள் மாறான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக கருதினாலோ அவர்கள் தங்களது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படையாக வெளிப்படுத்துதல் வேண்டும். எவரும் ஒருபோதும் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிக்க முடியாது.

அந்தவகையில் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது ஏற்கனவே பொதுஅமைப்புக்களுடன் இணைந்து இப்போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்கள், போராடியவர்கள் என்ற அடிப்படையிலும் பல்கலைக்கழக சமூகத்தின் ஓர் அங்கம் என்ற வகையிலும் மாணவர்களின் போராட்டம், அவர்களது கோரிக்கை நியாயம் என ஏற்றுக்கொண்டு அவர்களின் போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்குவதோடு அவர்களுடன் கரம்கோர்க்கின்றோம்" - என்றுள்ளது. (எ)

## தொடர்ச்சிகள்

### மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை ஊடகவியலாளர்கள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரைச் சந்தித்தனர். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்துவதற்கு பல வழிகள் உள்ளன. அதனை விடுத்து நிர்வாகத்தை முடக்கி போராட்டம் நடத்த இயலாது. அதனை நாங்கள் மாணவர்களுக்கு பல தடவைகள் கூறியுள்ளோம். ஆனால் அவர்கள் அதனை புரிந்து கொள்ளவில்லை. அதேபோல் போராட்டம் நடத்துவது தொடர்பாக எங்களுக்கு முன்னர் அறிவிக்கவில்லை. இந்த நிலையில் இன்று (நேற்று) மாலையும் மாணவர்களை அழைத்து பேசினோம். போராட்டத்தை கைவிடுங்கள் என நாங்கள் கேட்டோம். அதற்கும் மாணவர்கள் மறுத்துள்ளனர். இவ்வாறான நிலையில் எங்களுக்கு மேல் உள்ளவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கமைய கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவ வணிக பீடம் ஆகியவற்றின் கல்வி செயற்பாடுகளை நிறுத்தும் தீர்மானத்தையும், விடுதிகளில் உள்ள மாணவர்களை நாளை (இன்று) மாலை 4 மணிக்கு முன்னதாக வெளியேற வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளோம். இதன் பின்னர் போராட்டத்தில் 10 மாணவர்கள் மட்டுமே நிற்பார்கள். இதனால் மாணவர்களுடைய போராட்டம் நிச்சயமாக தோல்வியை சந்திக்கும் என துணைவேந்தர் மேலும் கூறியுள்ளார். (எ)

### சந்திரிகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்கு முதலமைச்சரினால் அனுப்பப்பட்ட செய்திக்குறிப்பில், இந்தக் கடிதம் 16.10.2017 அன்று ஆங்கில மொழியில் சந்திரிக்கா பண்டார நாயக்கவுக்கு அனுப்பப்பட்டது. பதிலேதும் இதுவரை வரவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலமைச்சரினால் அனுப்பப்பட்ட கடிதத்தில்,

"சாட்சிகளை பாதுகாப்பது அரசின் கடமை. வடமாகாணத்தில் 150,000 இராணுவத்தினர் உள்ளனர். இவ் வழக்கின் சாட்சிகளை அவர்களின் பாதுகாப்பிற்காக வவுனியாவிலிருந்து அனுராதபுரத்துக்கு மாற்றுவதென்பது வேடிக்கையானது. இவ்வளவு எண்ணிக்கையான இராணுவத்தாலும் பொலிஸினாலும் இவர்களுக்கு போதுமான பாதுகாப்பை அளித்திருக்க முடியும். நான் அறிந்த அளவில் மூன்று சாட்சியாளர்களில் எவரும் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டதாகவோ அல்லது அவர்கள் இலங்கையில் இப்பொழுது இருப்பதாகவோ தெரியவில்லை. சாட்சியாளர்கள் சட்டமா அதிபரிடமிருந்து பாதுகாப்புக் கோரியிருந்தால் அப்படியாகப் பெற்றுக் கொண்ட ஆவணத்தின் வகையை சட்டமாஅதிபர் பகிரங்கமாக வெளியிடவேண்டும்" - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

### கள்ளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது உரிய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அனுமதிப்பத்திரம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆயினும் கித்துள் மரத்திலிருந்து கள் எடுப்பதற்கு அனுமதிப்பத்திரம் அவசியமில்லை என நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ், கள் எடுப்பதற்கு அனுமதிப் பத்திரம் அவசியமாக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த 2013 இல் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டு அனுமதிப்பத்திரத்தின் அவசியம் நீக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய மதுவரி வருமானத்தை உரிய முறையில் உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் நிலவியதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

### வாளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மடத்தடிப்பகுதியில் , நின்ற சிலர் பொலிஸ் வாகனத்தை கண்டு தப்பியோடியுள்ளனர்.

அவர்களை விரட்டிச்சென்ற பொலிஸார் நால்வரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரிடமிருந்த நீண்ட குடையை சோதனை செய்தபோது அதனுள்ளிருந்து வாளொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கைது செய்யப்பட்ட நால்வரும் 17 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட நால்வரையும் பொலிஸார் யாழ் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவர்களை 14 நாள்களுக்கு சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜப்பானில் 'திடுக்'

டோக்கியோ,நவ.01

ஜப்பானின் ஸாமா நகரில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் 2 மனிதத் தலைகள் உள்ளிட்ட 9 சடலங்களைப் பொலிஸார் கைப்பற்றியதுடன் வீட்டின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.


ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் தெற்குப் பகுதியான ஸாமாவில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பின் வாசலில் நேற்று ஒரு குளிரூட்டப்பட்ட பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்தவர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் விதமாக பெட்டிக்குள் 2 மனிதத் தலைகள் இருந்துள்ளன.

இது தொடர்பாகத் தகவல் அறிந்து விரைந்த பொலிஸார், வீட்டின் கதவை உடைத்துச் சோதனையிட்ட போது நெஞ்சை உறைய வைக்கும் விதமாக அங்கு 7 சடலங்கள் இருந்துள்ளன. சடலங்களைக் கைப்பற்றிப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ள பொலிஸார், அந்த வீட்டில் தங்கியிருந்த ஷிராய்ஷி (வயது–27) என்பவரையும் கைது செய்தனர்.

எனினும், வீட்டில் இருந்த சடலங்கள் தொடர்பான தெளிவான காரணங்களைப் பொலிஸார் கூறவில்லை. மேலும், இச்சம்பவம் தொடர்பாகத் தலைமறைவான 23 வயதுப் பெண் ஒருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

# ஜோடியாகும் 'பிக்பாஸ்' பிரபலங்கள்





சென்னை, நவ. 01

"பிக் பாஸ்" நிகழ்ச்சி மூலம் பிரபல்யமாகிய பலரும் தற்போது சினிமாவில் "பிஸி"யாகியுள்ளனர்.

ஏற்கெனவே, ஓவியா, ஆரவ் உள்ளிட்டோர் படங்களில் நடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், தற்போது ரைசா மற்றும் ஹரிஷ் கல்யாண் ஆகியோர் ஒரு படத்தில் ஜோடியாக நடிக்கவுள்ளனர்.

இயக்குசர் இலன் இயக்கும் இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கவுள்ளார்.

மேலும் படத்தின் "பெர்ஸ்ட் லுக்" எதிர்வரும் 5ஆம் திகதி வெளியாகும் என கூறப்படுகிறது.

# தொகுப்பாளினியாகும் ஜூலி




சென்னை,நவ.01

'பிக்பாஸ்' நிகழ்ச்சி மூலம் பலரின் கோபத்துக்குள்ளானவர் ஜூலி. வீரத் தமிழச்சி என்று ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது பாராட்டப்பட்ட இவர், இந்த நிகழ்ச்சி மூலம் அப்பெயரைக் கெடுத்துக் கொண்டார்.

இந்நிலையில், இந்தியாவின் கலைஞர் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியின் தொகுப்பாளராகக் களமிறங்கியுள்ளார் ஜூலி.

திங்கள் முதல் வெள்ளி வரை அவர் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சி ஒளிபரப்பாக இருக்கிறதாம். ஜூலி தொகுத்து வழங்க இருக்கும் அந்த நிகழ்ச்சியின் நடுவர்களாகக் கலா மாஸ்டர் மற்றும் நடிகர் கோகுல் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

# 40 நாட்களில் 140 நிலநடுக்கம்




பிரான்ஸ்,நவ.01

பிரான்ஸின் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் கடந்த 40 நாட்களில் மாத்திரம் 140 தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் குடியிருப்புவாசிகள் அச்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து நிலநடுக்க ஆய்வு வல்லுநர்கள் கூறுகையில்,

"பிரான்ஸில் ஆல்ப்ஸ் மலைக்கு அருகே உள்ள பகுதிகள் கடந்த 40 நாட்களில் மாத்திரம் 140 சிறிய நிலநடுக்கங்களைச் சந்தித்துள்ளன.

இதில் வலுவான நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.8 என்ற அளவில் பதிவாகியுள்ளது. மேலும், விளக்க முடியாத அளவுக்கு நிலநடுக்கங்களின் எண்ணிக்கை இந்தப் பிராந்தியத்தில் அதிகரித்துக் கொண்டே போகிறது.

எனினும், பள்ளத்தாக்குகளில் நிலநடுக்கங்களைக் கண்காணிக்கும் வகையில் பல கருவிகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பொருத்தியுள்ளோம். மிகப்பெரிய நிலநடுக்கம் உண்டாகுமா என்று எங்களுக்கு தெரியவில்லை, ஆனால் அவ்வாறு நேர்ந்தால் பல உயிரிழப்புகள் உண்டாக வாய்ப்புள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.



# ஐரோப்பாவை சுழற்றிய சூறாவளி

## 6 பேர் பலி

ஐரோப்பா, நவ,01

மத்திய மற்றும் வட ஐரோப்பாவைத் தாக்கிய பாரிய சூறாவளி காரணமாக 6 பேர் பலியாகியுள்ளனர்.

பலியானவர்கள் ஜேர்மனி, போலந்து மற்றும் செக் குடியரசு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செக் குடியரசின் அதி உயர் மலைப் பிரதேசத்தில் இந்த சூறாவளியின் வேகம் மணிக்கு 112 மைல் வேகத்தில் வீசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூறாவளி காரணமாக போலந்து மற்றும் செக் குடியரசு நாடுகளில் ஆயிரக்கணக்கான குடியிருப்புக்கள் மின்சார விநியோகம் இன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் ரயில் தண்டவாளங்கள் சேதமடைந்துள்ளமையால், ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, போலந்தில் பாரிய மரங்கள் வீழ்ந்த நிலையில் பல நெடுஞ்சாலைப் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தவிர, இந்த அனர்த்தத்தின் காரணமாக மூன்று நாடுகளைச் சேர்ந்த பலர் காணாமல் போயுள்ளனர் என மீட்புப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# சரிந்த தளபதியால் தலையில் காயம்


சென்னை,நவ.01

நடிகர் விஜய்யின் 'மெர்சல்' படத்துக்காக வைக்கப்பட்ட 'கட்-அவுட்' விழுந்தமையால் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

விஜய்யின் படமான 'மெர்சல்' தீபாவளியன்று வெளியானதைத் தொடர்ந்து அவரது ரசிகர்கள் திருப்போரூரின் ராஜீவ் காந்தி சாலையில், 30 அடி 'மெர்சல்' படத்தின் பதாகையை வைத்திருந்தனர்.

இந்தப் பதாகை எதிர்பாராத விதமாகச் சரிந்து விழுந்தது. இதனால் அவ்வழியாகக் காரில் சென்ற ஒருவர் தலையில் காயமடைந்துள்ளார். இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

# டிரம்பின் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை



அமெரிக்கா,நவ.01

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர அனுமதி மறுக்கும் டிரம்பின் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, திருநங்கைகள் இராணுவத்தில் சேர அனுமதிக்கும் திட்டத்தினைக் கொண்டு வந்தார். ஆனால், டிரம்ப் பதவி ஏற்ற பின்னர் திருநங்கைகள் இராணுவத்தில் சேர்வதைத் தற்காலிகமாக ஒத்தி வைத்தார். பின்னர் இராணுவத்தில் திருநங்கைகள் சேர இனி அனுமதி கிடையாது என்றும் அதிரடியான அறிவிப்பை வெளியிட்டார்.

இதனால் அமெரிக்க இராணுவத்தில் பணிபுரியும் சுமார் 13 இலட்சம் திருநங்கைகள் பாதிக்கப்பட்டனர். இதனால் பலரும் டிரம்பின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், டிரம்ப்பின் உத்தரவைத் தடை செய்து உத்தரவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

# அரையிறுதியில் யூனியன், ஜெகமீட்பர்

மைலோ கிண்ண உதைபந்தாட்டத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டங்களில் வலைப்பாடு ஜெகமீட்பர் மற்றும் ஆனைக் கோட்டை யூனியன் அணிகள் வெற்றிபெற்றன.

மைலோக் கிண்ண உதைபந் தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற முதலாவது காலி றுதியில் ஆனைக்கோட்டை யூனியன், 3:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண் மீனை வீழ்த்தியது. மற்றொரு காலிறுதியில், வலைப்பாடு ஜெகமீட்பர் - குருநகர் பாடும்மீன் அணிகள் மோதின. அட்டம் 2:2 என்ற கணக் கில் சமநிலையடைந்தது. பின்னர் ‘பனால்டி’ உதையில் ஜெகமீட்பர் அணி, 3:2 கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)



# அவரது முடிவு அவர் கையில்

டோனியின் ஓய்வு குறித்து எவரும் விமர் சிக்கவேண்டியதும் இல்லை, தேவையில்லா மல் அவசரப்படுத்தவும் தேவையில்லை. தனக்கான நேரம் வரும்போது அவரே முடிவு செய்யட்டும் என ராகுல் டிராவிட் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியை, இரண்டு உலகக் கிண்ணங்களை வெல்ல வைத்து (2007இல் இருபது-20, 2011இல் ஒருநாள்) இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தவர் டோனி.

2014ஆம் ஆண்டு இறுதியில் டோனி டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற் றார். கடந்த ஜனவரி மாதம் அவர் ஒருநாள் போட்டி மற்றும் இருபது-20 அணிகளுக் கான தலைவர் பதவியிலிருந்து விலகி சாதாரண வீரராக விளையாடி வருகிறார்.

36 வயதான டோனி 2019 உலகக் கிண் ணம் வரை விளையாடுவாரா? என்று எதிர் பார்க்கப்படுகிறது. சிறப்பாக ஆடினால் மாத்திரமே டோனி அணியில் நீடிக்க முடியும்.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு நடை பெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பே டோனி ஓய்வு முடிவை அறிவிக்க வேண்டும் என்று விமர்சிக்கப்பட்டு வரு கிறது. எனினும், தனது ஓய்வு குறித்து அவர் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் டோனியை எவரும் விமர்சிக்க வேண்டாம் என்று முன்னாள் அணித்தலைவர் ராகுல் டிராவிட் வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பாக ராகுல் டிராவிட் மேலும் கூறுகையில்,

“டோனி, வீராட்கோலி போன்ற சிறந்த வீரர்கள் தங்கள் ஓய்வு குறித்துத் தாங்களே முடிவு எடுப்பார்கள். டோனியின் ஓய்வு குறித்து ரசிகர்கள் இடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அவரைத் தேர் வுக் குழுத் தேர்ந்தெடுத்தால் அவர் விரும் பும் வரை விளையாட முடியும். - என்றார்.(ஐ)



# இந்தியத் தொடருக்கு மத்யூஸ், பெரேரா ரெடி

“இந்திய அணிக்கு எதிராக அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கிரிக்கெட் தொட ரில் பங்கேற்க இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களான அஞ்சலோ மத்யூஸ், அசல குணரத்ன மற்றும் குசல் பெரேரா ஆகி யோர் தயாராகவுள்ளனர்” என இலங்கை ஒருநாள் அணித்தலைவர் உபுல் தரங்க தெரிவித்துள்ளார்.

நடந்துமுடிந்த பாகிஸ்தானுக்கு எதி ரான கிரிக்கெட் தொடர் குறித்த ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இந்தியவுக்கு எதிரான கிரிக்கெட் தொட ரில் சிறப்பாக விளையடும் முனைப்பில் உள்ளோம். இந்திய மண்ணில் அந்த அணியை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்பது குறித்து தீவிர ஆலோசனை நடத்தி வருகிறோம்.

“இந்நிலையில், காயம் காரணமாக கடந்த சில தொடர்களில் பங்கேற்காத இலங்கை அணியின் முக்கிய நடத்திரங் களான மத்யூஸ், அசல குணரத்ன மற்றும் குசல் பெரோ ஆகியோரின் உடல் நிலை யில் தற்போது முன்னேற்றம் உள்ளமை யால் குறித்த மூவரும் அணியில் இணை யும் வாய்ப்பு உள்ளது.” என்றார்.

மத்யூஸ், குசல் பெரேரா மற்றும் அசல குணரத்ன ஆகியோர் சில தினங்களில் உடற் தகுதிப் பரிசோதனைக்கு முகங் கொடுக்கவுள்ளனர் எனக் கிரிக்கெட் வட் டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.(ஐ)




உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி
Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 01.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.